ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

दूरीकरोति कुमतिं विमलीकरोति चेतश्चिरन्तनमघं चुलकीकरोति ।
भूतेषु किं च करुणां बहुलीकरोति सङ्गस्सतां किमु न मङ्गलमातनोति॥

மஹான்களுடைய சேர்க்கையானது கெட்ட புத்தியை வெகு தூரத்தில்விலக்கி விடுகின்றது. மனத்திற்குநல்லதெளிவையளிக்கின்றது. பல ஜன்மங்களில் நம்மால் சம்பாதிக்கப் பட்டிருக்கும் பாபங்களை பக்ஷித்து விடுகின்றது, பின்னும் பிராணிகளிடங்களில் அதிகமான கருணையை உண்டு பண்ணுகின்றது. இவை முதலான எவ்விதமங்களத்தைத் தான்செய்யவில்லை.

உலகில் மனிதர்களின் நன்மைக்கோ, அல்லது தீமைக்கோ, பழக்கமென்பது முக்கியமான காரணம், ஒருவேதியன் வைதிக கர்மானுஷ்டானமில்லாத ஸாமான்ய ஜாதியிலுள்ள ஒரு கூட்டத்தாருடன் எப்பொழுதும் நெருங்கிப் பழகிவந்தால் கொஞ்ச காலத்திற்குள் இவனுக்கியற்கையாயேற்பட்ட ஸந்தியாவந்தனம் முதலான முக்கியமான கர்மானுஷ்டானங்களையும்செய்யாமல் விட்டுவிடுகிறான். தற்காலம் ஸ்கூலில் படிக்கும் மாணவர்களுள் பெரும்பாலோருக்கு வைதிககர்மாக்களில் சிரத்தைகுன்றியதற்குப் பழக்கமே காரணமென்று நன்றாய்த் தெரிந்துகொள்ளலாம். இப்பழக்கமானது கர்மானுஷ்டானங்களில் பற்றுதல் கொண்ட ஸாதுக்களிட மிருக்குமாகில் முறையே இவர்களுக்கும் அவ்விதமனுஷ்டிப்பதில் அதிக ஊக்கம் ஏற்படலாம். முற்காலத்தில் குரு குல வாஸம் பெற்றிருந்த மாணுக்கர்கள் விதிவழுவாது அவர்களுக்குற்ற கர்மாக்களை நன்கு அனுஷ்டித்த தற்கு அவர்களின் குருவான மஹான்களின் பழக்கமே காரணமென்று நன்கு வெளியாகின்றது, இக்கருத்தைக் கொண்டு தான் **सत्सङ्गतिः कथय किं न करोति पुंसां** மஹான்களுடைய சேர்க்கையானது புமான்களுக்கு எந்தெந்தசிரேயஸ்ஸைத் தான் செய்யவில்லை என்று ஓர்றிஞர் கூறியுள்ளார். ஆகையால் நாமும் எப்பொழுதும் மஹான்களுடைய பழக்கத்தைப் பெற்றால் விசேஷ க்ஷேமத்தை யடையலாம்.

ஆர்யதர்மம்உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.

ரக்தாக்ஷி-௵ தை-மீ௴ ௧௦-௨

தீர்த்ததானம் மிகச் சிறந்தது.

தர்மபுத்திருக்கும் ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கும் நடந்த ஸம்பாஷணை.

தர்மபுத்திரர்—देव देवारविन्दाक्ष शरणागतपालक ।

त्वमेव संशयच्छेत्ता सर्वदा मम सुव्रत ॥

சகலதேவதைகளுக்கு முபாஸிக்கக் கூடிய தேவதையாயும், சரணமடைந்தோரைப் பாதுகார்க்கும் சக்தி பொருந்தியவரும் எல்லா நியமங்களையும் தரிப்பவருமான ஹே! அரவிந்தாக்ஷ! தாமரைமலர்போல் விளங்கும் நேத்திரத்தையுடைய கிருஷ்ணபகவானே! எப்பொழுதும் எனக்கு நிகழும் சங்கையைப் போக்கும் திறமை வாய்ந்தவர் நீர் தான். ஆகையால் உம்மிடம் வினவுகின்றேன்.

धनाढ्या देवताभक्ता ब्रह्मभक्ता बहुप्रदाः ।

सत्पात्रे दानशीलाश्च प्रयांति परमं पदम् ॥

रिक्तास्तु सर्वे मनुजाह्यशक्ता दानकर्मसु ।

का गतिः कानि दानानि तेषां मे कृपया वद ॥

அதிகச் செல்வத்தை யடைந்தவர்கள் தேவதா பக்தியையும், பிராமணபக்தியையும் பெற்றுத்தம்மிடம் வரும்யாசகர்களுக்கும் அதிக மீந்து. மற்றுமுள்ள பெரியோர்களுக்கும் எப்பொழுதும் வேண்டியதையளித்து அதினால் சிறந்த மோக்ஷமென்கிற ஸ்தானத்தை யடைகின்றார்கள். லக்ஷ்மீகடாக்ஷம் பெறாத. மற்று

முள்ள ஏழைகளான சகல ஜனங்களும் பிறருக்கீவதென்கிற தான கர்மாவில் சக்கியற்றவர்கள். அவ்வித தரித்திரர்களுக்கு என்ன கதி? அவர்கள் எவ்விததானங்களைச் செய்கின்றது என்கிற இவ்விஷயத்தைக் கருணையால் எனக்கு அறிவிக்கவேண்டுமென வேண்டினர்.

ஸ்ரீ பகவான் கூறுகின்றார்.

शृणु पाण्डव वक्ष्यामि श्रोतॄणामघनाशनम् ।
यस्य श्रवणमात्रेण वाजपेयफलं भवेत् ॥

ஹே பாண்டவ! யாதொன்றைச் செவியுற்ற மாத்திரத்தில் வாஜபேயமென்கிற சிறந்த வேள்வியின் அனுஷ்டானத்தாலேற்படும் பலன் உண்டாகுமோ? கேட்போரின் பாபங்களைப் போக்கும் மஹிமை பொருந்திய அவ்விஷயத்தைச் செப்புகின்றேன் கேள்.

निष्किंचनाहि मुनयस्सर्वे धर्मपरायणाः ।
सदा सर्वहिते युक्ता स्तोयदानाद्दिवं गताः ॥

சகலமுனிவர்களும் பொருளில்லாதவேழைகளே. அப்படியிருந்தும், எப்பொழுதும் தர்மானுஷ்டானத்தில் பற்றுதலுள்ளவர்களாயும் ஸர்வப்பிராணிகளுக்கும் ஹிதத்தைச் செய்கின்றவர்களாயுமிருந்துகொண்டு தீர்த்த தான மென்கிற தானத்தை செய்து அதினால் மோக்ஷத்தை யடைந்திருக்கிறார்கள்

कांचनादीनि दानानि गृह्णन्ति गृहमेधिनः ।
उपर्युपरि वांछन्ति तोयात्तृप्ता भवन्ति हि ॥

கிருஹஸ்தர்கள் ஸுவர்ணம் முதலான தானங்களைப் பெற்றால் எவ்வளவு கொடுத்தாலும் போதுமென்கிற திருப்தி யுண்டாகாமல் மெம்மேலும் அதிகம் வேண்டுமென்று விரும்புகிறார்கள். உதகதானத்திலோ அவ்விதமின்றி நாம் கொடுத்த தீர்த்தத்தை யருந்தி தாகவிடாய் தீர்ந்த பிறகு எவ்வளவு நிர்பந்தப் படுத்தினலும் வேண்டாமென்று சந்தோஷமாய்ச் சொல்லித் திருப்தி யடைகின்றார்கள்.

दानानामुत्तमं दानमन्नदानं तथा जलम् ।
सद्यस्तुष्टिकरं पुण्यं प्राणिनां जीवितद्वयम् ॥

प्राणिनामपि सर्वेषां प्राणा वारिणि संस्थिताः ।
तज्जलं ये प्रयच्छन्ति प्राणदाः परिकीर्तिताः ॥

மறையில் வரையப்பட்ட பலவாறுன தானங்களுக்குள் அன்ன தானமும் ஜலதானமுமே மிகச்சிறந்தவை. இவ்விரண்டும் உடனே திருப்தியை புண்டு பண்ணக் கூடியது. அதிக புண்யத் தையளிக்கக் கூடியது. சரீரம் பிராணன் இவ்விரண்டையும் ரக்ஷிப்பதற்குஇவையே முக்கிய ஸாதனமாய் விளங்குகின்றன. சகலப்பிராணிகளுடைய பிராணன்களும் ஜலத்தில் நிலை பெற்றிருக்கின்றன. அவ்வித ஜலதானத்தை எவர்கள் அன்புடன் செய்கின்றுர்களோ அவர்கள் பிராணனைக் கொடுக்கின்றவர் களாகக் கருதப் படுகின்றுர்கள்.

अत्रैवोदाहरन्तीममितिहासं पुरातनम् ।
श्रोतृणां सर्वपापघ्नमायुरारोग्यवर्धनम् ॥

இவ்விஷயத்தில் சிரவணம் செய்வோர்களின் சகல பாபங்களையும் நாசம் செய்து, ஆயுள் ஆரோக்கியம் முதலானவைகளை விருத்தி செய்கின்றதாயும், பழமையாயும் விளங்கும் ஓர் இதிஹாஸத் தை உதாஹரிக்கின்றுர்கள். அதையும் கூறுகின்றேன் கேளும் என்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் கூறத்தொடங்கினுர். (தொடரும்]

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

உடை உடுத்தல்.

இந்துக்கள் உடைதரிக்கவேண்டிய முறையும்,
அதுவே அவர்கள்
சரீரத்திற்கு சுகங்கொடுக்கு மேன்பதும்

கடந்தசஞ்சிகையில், நாம், "பருத்தியின் பெருமை," "மற்றைய உடைகள் பருத்தியைப்போல் நம் நாட்டிற்கு அவ்வளவு ஏற்றதல்ல" என்ற இவ்விஷயத்தைப் பற்றிக் கூறிவந்தோம். ஈண்டுஉடை உடுத்தலைக்குறித்துச் சிறிதுஎழுதஆரம்பிக்கின்றேம்.

இந்துக்களாகிய நாம் உடுக்கும் பருத்திநூற்றுணியை சரீர முழுமையும் ஒரு மாதிரியாகத் தரிப்பதில்லை. சிலவிடத்தில் அதிக மடிப்புடனும் சிலவிடம் ஒற்றையாகவும் தரிக்கின்றோம். இடுப்பின் கீழ்ப்புரம் எக்காலமும் வஸ்திரமிருக்க வேண்டுமெனவும் மேற்பாகங்களில் சிலவிடம் சிலகாலமிருக்க வேண்டுமென்றும் விதியுண்டு. தலைப்பாகை இரண்டொரு கிரியைகளில் தவிர மற்றைய காலத்தில் விநியோகிக்கக்கூடாது. புதியது, காரம்வைத்தது, அழுக்குடையது, தைத்தது, கரையற்றது ஆகிய இவைகள் நீக்கப்படுவன. இவ்விதிகளுக்கெல்லாம் பிறகு காரணங் கூறுவாம். அநாரியர் உடை உடுப்பது தம்மானத்தை மறைக்கவும் குளிரைத்தடுக்கவுமேயன்றி வேறில்லை. நம்மவரோ உண்மையை யறிந்து அதனுல் சரீரம் தூய்மைபெற மனமும் நிர்மலமாமென்பதை அறியவேண்டியே. அன்றியும், ஐரோப்பியர்களுக்கு உடல்போனவழி உடைதரித்தலவசியம். எமக்கு நெருங்கிய சொக்காய் முதலியவற்றைத் தரித்தால் அது இரத்தத்தைச் சோஷிக்குமென்பதைப்பின் கூறுவோம்.

இத்தேசத்தில் சில பெண்கள் ரவிக்கைகளைக் கெட்டியாய்த் தரித்துக் கொள்வது வழக்கம். அவர்கள் தோள்களைப் பார்த்தால் தத்தம் சுபாவ நிறத்திற்குமாருக அங்கு தோன்றும் வெண்மையானது பருத்தியால் அங்குள்ள ரத்தம் சோஷிக்கப்பட்டதெனத் தோன்றும். ஆதலால் நம் தேசத்திற்கு காற்றுக்கொள்ளும்படி உடைதரித்தலே உசிதம் பெண்களும் நீர்சுரக்கும் இடந்தவிர மற்றவிடம்நெருங்க வுடைதரியார்கள். இனி சரீரமெல்லாம் ஒரேமாதிரியாக தரிக்காமலிருப்பதற்குக் காரணம் கூறுவாம். உடல், கொப்பிளுக்கு மேலுங்கீழும் பூர்வகாயமென்றும் அபரகாயமென்றும் பெயர்பெறும். இவைகளுள் அபரகாயம் அசுத்திஸ்தானமெனக் குறிக்கஅந்தணர் ஓர் அரைஞாண் கட்டுவதுண்டு. அபரகாயத்திற்றேன்றும் ரோகங்கள் அறுத்தல், காயம்வைத்தல் முதலிய கடும்சிகிச்சைகளாற்றுன் ஒழியுமாதலாலும், அங்கு தரிக்கப்பட்டவுடை எச்சமயத்தும் மயிர்க்கால்வழி வெளிவரும் மலங்களை இயக்குமாதலாலும்; அம்மயிர்க்கால்களில் வியர்வை தங்கி சொரி சிரங்கு முதலியன உண்டாகாதவழி எம்மைக்காப்

பது எமது இடையில் தரிக்கும் பருத்தி உடையே. பூர்வகாயத்தில் தரித்த உடையினும் அபரகாயத்தில் தரிக்கும் உடை அதிக மலமுள்ளதாதலால் அது அசுத்தி அதிகமுள்ளதெனச் சாஸ்திரங்களிற்கூறப்பட்டுள்ளது. இவ்விதம் பருத்தி ஒன்றுக்கொற்றுமையுள்ளதேயன்றி பட்டு முதலியன அவ்விதமில்லை. அவை இளகிய மலங்களை இயக்கினுந் தம்முட்சேர்த்துக் கொள்ளாது பட்டு கம்பளி பருத்தியுடை இவைகளைத் தண்ணீரில் உடனே நனைத்து உதறினால் தண்ணீர் தங்குவது எதனிடமென்றுநன்கு புலப்படும்.

உடைகளை, இடையில், முன்புறத்தில் அதிகமடிப்புடனும், பின்புறத்தில் குறைந்த மடிப்புடனும் தரித்தல் வழக்கம் தூரத்தில் வருபவனை நோக்கியவுடன் அவன் தம்மினத்தவனென்று அறிந்து கொள்ளுவதற்கு இவ்வுடையமைப்பு ஓர் காரணமாதலால் அதுவும் நமக்கோர் பேருதவியேயாகும். இடையில் அவரவரிஷ்டம்போல் தரிப்பினும் மேலுடலில் இடதுதோளிநின்றே தரிக்கவேண்டும். என்னெனில், மனிதர் சரீரத்தில் ஓடும் உதிரம் சுத்திபெறும் ஸ்தானமாகிய ஹிருதயம் மார்புக்குமேல் சிறிது இடது புறத்திலிருக்கின்றது. அவ்விடம் எப்பொழுதும் உஷ்ணமிருத்தல் வேண்டும். அதற்கெனவே அங்கு வஸ்திரத்தை மேல் தரிக்கின்றோம். மற்றைய விடங்களில் அதிக உஷ்ணம் கொடுத்தல் சீததேச வாசிகளான மேனாட்டினர் போன்றவர்களுக்கே நலத்தைப் பயக்குமாதலாலும், உஷ்ணதேசத்தில் வசிக்கும் நம் போன்றவர்களுக்கு அது கெடுதியை யுண்டுபண்ணுமாகையாலும் நாம் மற்றையவிடங்களில் மேல் உடை தரிக்கவேண்டுவதில்லை. இங்ஙனமிருக்க நம்மவருட்சிலர், யாதொரு அவசியமுமின்றி மேனாட்டு நாகரீகமெனும் பேய்பிடித்து, மிகக்குளிர் தேசத்திற்குற்ற உடைகளையே எப்பொழுதும் தரித்துக்கொண்டு அதனாலேற்படும் உஷ்ண மிகுதியின் காரணமாக பற்பல வியாதிகளுக்குள்ளாவது என்ன புத்தியீனம்?

நிற்க, நம் தேசத்துப் பெண்மணிகளும் அவ்விதமே தரித்தலோடு அவர்கள் சரீரவமைப்புக்கேற்பச் சிற்சில விசேஷ விதிகளுமுண்டு. ஆடவர்க்குச் சாயந்துவைத்த துணி கூடாதெனவிலக்கப்பட்டது. பெண்மக்களுக்கோவெனில், அஃது அவசிய

மெனவும் பட்டுநூல் சம்பந்தம் அதிலிருக்கவேண்டு மெனவும் விதிக்கப்பட்டது சாயத்திற் காரமதிகமாவதால் அஃது பருத்தி யினும் அதிகக் குணமுள்ளதே. எங்ஙனமெனில், பெண்மக்கள் அத்தகைய சாயந்துவைத்த துணியைத்தரித்தலால், அதிகச் சூடு சரீரத்தில் பற்றி அவர்களுக்கு சோணிதம் சரியான காலத்தில் வெளிப்படும்படி செய்யும், ஆதலாற்றான் அவர்க்குஉடையுமதிகம். அது சாயமுள்ளதாகவும் இருத்தல் வேண்டும். ஆபரணங்களும் அவர்களுக்கு இன்றியமையாதவை. அதுகொண்டே,

स्त्रियं सम्भावयेन्नित्यं भूषणाच्छादनादिभिः ।

என்று நமது தர்மசாஸ்திரங்களிற் கூறப்பட்டிருப்பதைக்காண்க நாம் இதுகாறும் கூறியவற்றால், ஆஸ்திகர்களான நம்மவர்கள் உடை தரிக்கும் விதமே, நமக்கு நன்மையைப் பயக்குவதென நன்கு தெரியவரும்.

புதிய வஸ்திரம் தரிக்கும் காலம்.

"புதியதும் வண்ணான் வெளுத்ததும் அழுக்குள்ளதுமான உடையை உடுத்தல கூடாது" என்பதாதி வசனங்களாற் சிற்சில ஸமயம் தவிறமற்றக்காலங்களில் புதியவுடை தரித்தலும விலக் கப்பட்டிருக்கின்றது. அதற்குக் காரணம் இது. புதிய வஸ்திரம் வேலைக்காரர்கள் கைப்பட்டு அவர் சரீரசக்தியுடன் கலந்து கொண்டிருக்கின்றது. அது மாத்திரமல்ல. சரீரத்தில் வியர்வை முதலிய இளகிய மலங்கள் மயிர்க்காலின் வழி வெளி வருங்கால் அவைகளைத் தமமுட்கொமியக்குந் தன்மையாற்றான் பருத்தியுடை மாந்தர்க்கு உபயோகமாமென முன்னர்க்கூறினோம். அவ்விதவுபகாரம் புதிய வஸ்திரத்தால் முடியாததலால் அஃது விலக்கப்பட்டதென்க. அவைகளில் வேலைசெய்யுங்கால் நூல் கெட்டியாக விருக்க வேண்டிச் சேர்க்கும் கஞ்சிமுதலியன அவ் வஸ்திரத்துளுரைந்து நிற்றலால் மனிதன் வலிமையாலன்றி தண் ணீரை இழுக்கும் சக்தியற்றது. எனவே, அதை தரிக்குங்கால் இளகிய வேர்வை முதலிய மலங்கள் அதனாலியக்கப்படாது மயிர் க்கால்களில் தங்கியுறைந்து பற்பல ரோகங்களை யுண்டுபண்ணுமா தலால் அது கூடாதென்பது ஆன்றோர் கருத்து.

இனிதானஞ்செய்யுங் கால்கொடுப்பவனும்வாங்குபவனும் அத்துணியைத்தொட நேருமாதலின் இருவர் சரீரமலமும் ஒன்றிற் சேராவண்ணம் கொடுப்பதும் வாங்குவதும் கோடியுடையையே. ஆதலாற்றான் உபநயனகாலத்தில் கோடிவஸ்திரத்தையே தரிப்பித்தல் வழக்கம். அக்காலம் தம்முன்னோர் வழிமாறாது தம்மிடம் உட்புகுந்த அந்தணற்குரியஅரியபோராற்றல் உடனே வெளிப்படாது. சரீரத்திற்றானேமூன்று தினங்களாரைந்து ஒன்றுபடவேண்டி அத்தகைய கோடிவஸ்திரம் தரித்தல்அவசியமெனக் கொள்ளப்பட்டது. ஆகவே, முற்கூறியுள்ளவாறு குறித்தசில காலங்கள்தவிர மற்றைய காலகளில் வெளுத்த வஸ்திரமேயுடுத்தல்வேண்டும்.

வண்ணான் வெளுத்த வஸ்திரத்தையுடுத்தல் கூடாதென்பது.

இனிவெளுத்த உடைகளைத் தண்ணீரில்நனைக்காதுஉடுப்பதினால் வருங் கெடுதிகளைப் பற்றிச் சிறிது கூறுவாம்.

உவர்மண் சேர்க்கையின்றி எவ்விதத்திலும் வஸ்திரத்தில் வெண்மை தோன்றாதாதலின் அவ்வுவர் மண்ணின் காமம் மிகக் கடுமையென யாம் சொல்லாமலே அமையும். அதனியல்பு இரத்தத்தை முறித்துக் குற்றமுள்ளதாக ஆக்குதலேயாம். உதாரணமாக இரத்தக்கட்டிகளில் ஆமணக்கெண்ணெயுடன் கலந்த உவர் மண்ணைப் பூசினால் அது நைந்துபோம். ஆதலால், அவ்வுவர் சம்பந்தமுள்ள வஸ்திரங்களையுடுத்தல் இரத்த சோஷத்திற்கு ஹேதுவாமென்பது ஆன்றோர் கருத்து. இனி எக்காலமும் வெளுத்த காரத்துணியைத் தரிப்பவர்க்கு விஷபேதியல்லது அம்மையென்னும் வியாதியுங்கண்டால் அது மிகவும் கெடுதியை விளைவிக்கும். மாமிசங்களைப் புசிப்பவர்க்கும குடிப்பவர்க்கும் மேற்கண்ட பிணிகள் அதிகமாய் உறைவதுபோல இவர்களுக்கும் சிறிதுபாகம் சம்பந்திக்கலாமல்லவா? இவ்விஷயததில் திருஷ்டாந்தம் வேண்டுமானால் எந்த தேசத்தில் வண்ணான் வெளுத்த துணியை நீரிலிடாது தரிக்கும் வழக்க

முளதோ, எவ்விடம் உவர் அதிகமுளதோ (இஃது மாளவராச்சியத்திலதிகம்) கடல் காற்று எங்கு அதிகம் அடிக்கின்றதோ அத்தேசங்களில் மேற்கண்ட பிணிகள் உண்டானால் அது மிகவும் இன்னலை விளைவிக்குமென்பது யாவரும் அறிந்ததே. வெண்மைக் கார வஸ்திரத்தை ஓர் துண்டெடுத்துக் கையில் ஓரிடத்தில் நெருங்கக்கட்டி ஒரு தினம் வைத்தெடுத்தால் பிறகு அவ்விடத்தில் ரோமங்களும் உதிரக்காணலாம். இத்தகைய காரணங்களால் வண்ணான் வெளுத்த வஸ்திரம் கூடாதென விலக்கப்பட்டது.

அது கொண்டே, அதிக அழுக்குள்ள வஸ்திரமும், அடிக்கடி ஊசியைக் குத்தி இழுத்து அதனால் தன்னியல்புமாற நேர்ந்த வஸ்திரமும் தரிக்கக் கூடாதென்றும்; எப்பொழுதும் ஸ்நானஞ் செய்யுங்காலத்து வஸ்திரத்துடன் ஸ்நானம் செய்ய வேண்டுமென்றும் விதிக்கப்பட்டது காண்க. இதனால் வஸ்திரந்தரித்தல் நற்பயன்களைக் கருதியே என நாட்டப்பட்டது. இவ்விதம் வஸ்திரந்தரிக்கும் வழியைக்குறித்தும் கச்சங்களைத் தரிக்கும் முறையைக் குறித்தும் கருணை வள்ளல்களான நம் முன்னோர்கள் லோகோபகாரத்தைக் கருதி எழுதியுள்ள கிரந்தங்களில் நன்கு வெளியிட்டிருக்கின்றனர். அதையும் சமயம் நேருங்கால் எழுதுவோம். சுருங்கச் சொல்லின், நம்மவர் உடல்போன வழியெல்லாம் நெருங்கியாவது அல்லது மெதுவாகவாவது உடை தரிக்கமாட்டார்கள். எமது தேசத்தில் ஆடவர்க்கல்லது பெண்டிர்களுக்கு அக்கினியாலல்லது நீரால் கெடுதிநேரின் உடனே ஒரு முடிச்சை விடுக்க வஸ்திரம் சரீரத்தை விட்டுக் கழன்றுபோமாதலால் நமது உடை, சாஸ்திர சம்மத மாத்திரமன்றி, சரீரத்திற்கும் மெத்த சுகம். மேற்றிசையார் உடைகளில் இவ்வித தற்செயல்கள் நேர்ந்தால் அது எவ்விதமாகுமோ அறிகிலோம். எனவே, அவசியமான சமயங்கள் தவிர மற்றைய காலங்களில் மேற்றிசை நாகரீகத்தில் மூழ்கி அவ்வுடைகளிலேயே மயங்கி நிற்காது, நமது நாட்டிற்குற்றதும், சரீரத்திற்கு சுகத்தையளிப்பதும் சாஸ்திர ஸம்மதமுள்ளதுமான உடையையே நாமும் உடுத்தி நமது முன்னோர்களனுஷ்டித்த உயர்ந்த வழியையே நாமும் பின்பற்றி, இகபர சுகங்களைப் பெருவோமாக. சுபம்!

ப. வ. கணபதிசாஸ்திரி B. A

ஓர் அபிப்பிராயம்.

ரக்தாக்ஷி-ஹு தை-மாதம் 3-ந்தேதி வெளியான ஆர்யதர் மத்தில். கே. வி. சுப்பிரம்மணியசாஸ்திரிகளால் "சிவபெருமா னின்—பஸ்மதாரணம். மயானவாஸம்" என்றுமகுட மிட்டெழு திய வியாஸத்தை நாம் அடிமுதல் முடிவுவரைப் படித்துப்பார்த் தோம். அதில் சாஸ்திரிகள் சொல்லியவை யாவும், தக்கயுக்திக ளாலும் சாஸ்திரவசனங்களைக் கொண்டும் மறுக்கக் கூடியவைகள் என்பதில் யாதும் தடையில்லையாயினும், அவ்வழியில் செல்ல நமக்கு மனமில்லாது சாஸ்திரிகளுக்கும் இதுபோன்ற வியாஸ மெழுதும் பண்டிதர்கட்கும் கலகத்திற்குக் காரணமானதும், விஷ் ணுபக்தர்களின் மனதைப் புண்படுத்தக் கூடியதுமான இவ்வியா ஸத்திற்கிடம் கொடுத்த ஆர்யதர்மம். பத்திராதிபர் அவர்கட்கும் ஒரு விஷயத்தைத் தெரிவிக்க வேண்டியே இதை எழுத முன்வந் தோம். அதாவது தொண்டுதொட்டுநம் தேயத்தில் இம்மாதிரி யான சைவ வைஷ்ணவ கக்ஷிபேதங்களை யுண்டுபண்ணும் கிரந் தங்களையெழுதி சைவர்களென்றும், வைஷ்ணவர்களென்றும் இரு வகுப்பேற்பட்டு ஒருவரையொருவர் தூஷித்துப் பேசுவதும் எழுதுவதுமாகவே நாளிதுவரை பண்டிதர்கள் காலங்கழித்து வந்ததிலிருந்து "ஆடும் ஆடும் சண்டையிட நரிக்குக் கொண் டாட்டம்" என்றபடி மிஷனரிகள் என்ற விஷநரிகள் இடை யில் புகுந்து இருவரையும் நசுக்கி மயக்கி எண்ணிறந்த ஆர்யர் களை கிருஸ்துமதத்தில் சேர்த்துத் தனி ஜாதியாக்கி இந்துக்க ளான ஆர்யர்களுக்குச் சமீபத்தில் அவர்களை இருத்தி. ஒரு சரீரத்திலுள்ள அவயவம் மற்றொரு அவயவத்தை ஹிம்ஸிக்க வும் தூஷிக்கவும் செய்வதுபோலவே இவர்களையும் செய்யச் செய்துவிட்டதைச் கண்ணுற்ற உண்மையான ஆரியர்கள் கண் ணீர்விட்டுக் கதறுகின்றனர். ஆகவே நமது சாஸ்ரிகள் போன்ற ஆரியப்பண்டிர்கள் கக்ஷிபேதங்களையும், கலகங்களையும் உண்டு பண்ணும் வியாஸங்களை இனியும் எழுதாது நிறுத்திவிடவேண் டுமென்று. அவ்விதம் எழுதியபோதிலும் ஆர்யதர்மம் அதற்கு இடம் தாராமல் ஒற்றுமையை வளர்க்கும் முறையுல் பாடுபடும்

தனது இயற்கைக்குணத்தையே பின்னும் அதிகரிக்கச்செய்து நடக்கவேண்டுமென்றும் பிரார்த்திக்கிறோம். மேலும் நாம் அத்வைதமதத்தையொட்டிய வைஷ்ணவர்களாயிருப்பினும், 'இம்மாதிரி வியாஸங்களிலோ அதற்காதாரமான வசனங்களின் உட்கருத்தை சம்பிரதாயப்படி அறிந்தவர்களாயினும் இதைப்படித்தமாத்திரத்தில் எமது மனதே கொதிப்பையடைகின்றதானால், சாஸ்திரரகஸியமறியாச் சிலர்இவ்வியாஸத்தால்மிக்கத்துக்கமுறுவக்கூடும் என்பதிலையமுண்டோ ஆகவேநாம் இதுவரை சொன்னதிலிருந்துநமதுமித்திரரத்னமானசுப்பிரம் மணியசாஸ்திரிகள்கோபங்கொண்டுஆர்யதர்மத்தின் அருமையானபாகங்களைஇவ்விஷயத்தில்பின்னும் ஏதேதோவெழுதிவீணுக்காமல்,மந்திரம்,வைத்தியம், யோகம், வேதாந்தம், வியவசாயம் பின்னும் ஒற்றுமையை யுண்டுபண்ணக் கூடியதும் சத்துருவுக்கிடங் கொடாததுமான வழியிலுள்ள அருமையான விஷயங்கள் இவைகளைப் பற்றிய வழியில் புத்தியைச் செலுத்தி அவ்வழியில் தனது பண்டிதத்திறமையைக் காட்டும்படியும் வணக்கமாய் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஒற்றுமையை விரும்பும் கடலங்குடி பண்டித,
நடேசசாஸ்திரிகள்.
ஆர்யமதசம்வர்த்தனீ பத்திராதிபர்,

குறிப்பு, பிர்மஸ்ரீ நடேச சாஸ்திரியளவர்கள் நம் ஜனங்களுக்கு மதப்பற்று குறைவடைந்துவரும்இக்காலத்தில் உற்றுநோக்காமல் மேம்பார்வையாய் படிக்கும் விஷ்ணு பக்தியுள்ளவர்களுக்கு இந்த வியாஸத்தில் சிற்சில விடங்களை பார்க்கும்பொழுது விஷ்ணுவின் மஹிமையைக் குறைத்துக்கூறுவதுபோல்தோன்றும்படி இருக்குமாகையால்.இவ்விதம்கூட நம்பத்திரிகையில்எதற்காகவரவேண்டுமென்கிற அபிமானத்தை முன்னிட்டு இவ்விதம் வெளியிட்டிருப்பதாகத் தெரிகின்றது. இவ்வியாஸத்தை வெளியிட்ட பிர்மஸ்ரீ கே. வி. சுப்பிரமணியசாஸ்திரியள் சிவபெருமான். விபூதியையணிந்து கொண்டதற்கும் அஸ்தியை தரிப்பதற்கும் ஏற்பட்டகாரணத்தை யறிவித்து அவர் மஹிமையைப் போற்றவேண்டுமென்கிற நோக்கத்துடன் மட்டும் எழுதியவர்களேயன்றி விஷ்ணுவை தூஷிக்கவேண்டு மென்றுவது அவருக்கு மஹிமை

யில்லை என்றாவது சொல்லவேண்டுமென்கிற கருத்து அவர்களுக் கில்லை என்று முடிவில், தம் சொந்த அபிப்பிராயமாகக் கூறுமிடத்தில் "மற்ற தேவதைகளிடத்தில் துவேஷத்தை விட்டு" என்று ஸ்பஷ்டமாய் அறிவித்திருப்பதால் நன்கு வெளியாகிறது. இவர்களின் உட்கருத்திவ்விதமிருப்பினும் வியாஸத்தை வெளிப்படையாய் பார்ப்போர்களுக்கு மாறுதலாகத் தோன்றும்படியிருப்பதால் அவ்விதத் தோற்றத்திற்குக்கூட நம்பத்திரிகையில் இடங்கொடாமலிருப்பது நலமென்று நமது நடேசசாஸ்திரிகள் அவர்களின் கருத்தாகும்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

நன்னிலம் தாலுகா தலையூர்.

॥ अद्वैतविद्याशालाप्रकटनम् ॥

இந்த வித்யாசாலை கும்பகோணம் ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் அவர்களால் ஸ்தாபிக்கப் பெற்று 2-2-1922 முதல் நாளது வரையில் மூன்று வருஷகாலமாய் நடந்து வருகிறதென்கிற விஷயம் சென்ற வருஷங்களிலுள்ள இந்த ஆர்யதர்மம் பத்திரிகை மூலமாயும் ஷை வித்யாசாலையின் வருஷாந்தரிபோர்ட்டு மூலமாயும் யாவருமறிந்த விஷயமே.

அதில் ஸுப்பய்யாசாஸ்திரிகள் குமாரர் ராமசந்திரசாஸ்திரிகள் 1. எனது குமாரன் சுப்பிரமணியன் 2. விக்கிரபாண்டியம் கோபாலசாஸ்திரிகள் 3. மணக்கால் மீனாக்ஷிசுந்தரசாஸ்திரிகள் 4. கோகர்ணம் ஸோமயாஜிகணபதி சாஸ்திரிகள் 5. வடக்கந்தரை பத்மநாபசாஸ்திரிகள் 6. பிராந்தியங்கரை சுப்பிரமணியசாஸ்திரிகள் 7. இவர்கள் படித்துவந்ததில் ராமசந்திரசாஸ்திரிகள், எனது குமாரன் சுப்பிரமணியன், விக்கிரபாண்டியம் கோபாலசாஸ்திரிகள் இம்மூவர்களும் ஸ்திரமாய் மூன்று வருஷகாலங்களும் இருந்து பரிபாஷை ஸித்தாந்தலேச ஸங்கிரஹத்துடன் प्रस्थानत्रय பூர்த்

தி செய்து கொண்டு கும்பகோணம், திருச்சினப்பள்ளி, சிதம்பரம் காஞ்சீபுரம் முதலிய இடங்களில் நடந்த அத்வைதஸபையில் பரீக்ஷை கொடுத்து ஸம்பாவனை பெற்றுவருகிறார்கள்.

மீனாக்ஷிசுந்தர சாஸ்திரிகள் ஸூத்ரபாஷ்யமும் ஸித்தாந்த லேச ஸங்கிரஹமும் உபநிஷத் பாஷ்யத்தில் சில பாகமும், கண பதிசாஸ்திரிகள் ஸூத்ரபாஷ்ய ப்ருஹதாரண்யகபாஷ்ய ஸித்தாந் தலேச ஸங்கிரஹங்களும், பத்மனாபசாஸ்திரிகள் ஸித்தாந்தலேச ஸங்கிரஹமும் சில உபநிஷத் பாஷ்யங்களும், சுப்பிரமணியசாஸ் திரிகள் கீதாபாஷ்யமும் சில நாடகங்களும் படித்து அவர்கள் தங் கள் தங்கள் ஸௌகர்யத்திற்காக வெளியூர்களுக்குப்போய்மீமாம் ஸா முதலிய சாஸ்திரங்கள் வாசித்து வருகிறார்கள்.

இனி இரண்டாவது परिवृत्ति 2-2-1925 முதல் ஆரம்பிக்கப் படும். அதில் சேரவிருப்பமுள்ள அதிகாரிகளான வித்யார்த்தி களுக்கு மீ 1க்கு ரூ 15 வீதம் உபகாரத்ரவ்யம் கொடுக்கப் படும். ஆனால் அவர்கள் தன் தன் ஆசிரமத்திற்குத் தகுந்தபடி அக்நி கார்யங்களைச் செய்துவருவதுடன் प्रस्थानत्रयं முடித்துக் கொள்ள வேண்டும்.

தவிர, புதிதாக 2-2-1925 முதல் ஒரு யஜுர்வேத கனபாடி களைக் கொண்டு 15 வயதிற்குள்பட்ட 4 வித்யார்த்திகளுக்குக் குறையாமல் வேதாத்யயனம் செய்துவைப்பதாயும் அந்த வித் யார்த்திகள் காவ்யமும் வாசிப்பதுடன் அக்னி கார்யங்களும் செய்து வரவேண்டுமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

வேதம் சொல்லிவைக்கும் கனபாடிகளுக்கு மீ 1க்கு ரூ 15 வீதம் சம்பளம் கொடுக்கப்படும்.

வேதவித்யார்த்திகளுக்கு அன்னபானாதி ஸௌகர்யங்கள் யாவும் இந்தவித்யாசாலையிலேயே செய்விக்கப்படும், இந்த வித் யார்த்திகள் வேதாத்யயனமும் प्रस्थानत्रयभाष्य ங்களும் பூர்த்தி செய்துகொள்ள வேண்டுமென்கிற நிபந்தனைக்குட்படவேண்டும்.

இவ்வித்தியாசாலையில் வேதவித்யார்த்திகளாகவாவதுவேதா ந்த வித்யார்த்திகளாகவாவது சேர்ந்து கொள்ள அபிப்பிராய முள்ளவர்கள் மேல்கண்ட நிபந்தனைக்குட்பட்டு தன்னுடைய

பெயர், விலாஸம், யோக்யதை, வயது, ஆசிரமம், வாசித்த இடம் இவைகளுடன் 28-1-1925க்குள் கிடைக்கும்படியாக கும்பகோணம் ஸ்ரீ காஞ்சீகாமகோடிபீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீ மஹாஸன்னிதானத்திற்கும் எங்களுக்கும் அப்ளிகேஷன்கள் செய்து எங்களுடைய பதிலின் பேரில் வந்து சேரலாம்,

ஆகையால் ஷை வித்யாசாலை இவ்விதம் மேன்மேலும் விருத்தியடைய வேண்டி இந்தஸத் கார்யத்திற்கு ஆஸ்திகசிகாமணிகளான பிராமணோத்தமர்கள் தம் தம் சக்தியனுஸாரமாக வருஷம் ஒன்றுக்குரூபாய்ஒன்றுக்குக்குறையாமல்திரவ்யஸஹாயம்செய்து வித்யாசாலையை விருத்தியடையச் செய்து என்னையும் அனுக்கிரஹிக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

K. கிருஷ்ணஸ்வாமிஅய்யர்.
கார்யதர்சி, அத்வைத வித்யாசாலை.
தலையூர், பேரளம் போஸ்டு.

ரஸக்கொத்து

குற்றத்தைத் திருத்தல்.

'வித்வான்—அறிஞன்' என்ற சொல்லிற்குப் பல பர்யாய பதங்களைக் கூறப்புகுந்த அமரஸிஹ்மன்

विद्वान् विपश्चित् दोषज्ञः........॥

'குற்றங்களை அறிகின்றவன்' என்றும் குறிப்பிடுகின்றார். இந்த வாசகத்தில் "பிறரது குற்றங்களை யறிவதுபோல; தன்னுடைய குற்றத்தையும் அறிகின்றவன்" என்றபொருளும் த்வனித்து நிற்கின்றது. ,இந்த அர்த்தம் பொருந்துவதுதான்' என்று பிராஹ்மண ஸமூஹம் கருதுமானல் நான் ஒருசிறிய விண்ணப்பம் செய்துகொள்வேன். அதாவது:—

செட்டிநாட்டில் தனவைசியர்களின் ஊர்களாகிய 78 கிராமங்களிலும் நகரங்களிலும் நடைபெறுகின்ற சுபாசுபகார்யங்க

ளில் அந்தப் பிரபுக்களால் தர்மபுத்தியோடு வழங்கப்படுகின்ற "பூரி, தானம் வாங்குதலும், सत्रे भोजनं मठे निद्रा என்ற பழமொழியை அன்வர்த்தப்படுத்தவே போலும் ஸத்திரந்த விராது உணவுண்டு உயிர் வாழ்வதுமாகிய வ்ருத்தியைக் கைக் கொண்டு கண்ட மடந்தோறும் தம்பதிகளாகவோ வேறுவிதமா கவோ சரீரயாத்திரை செய்கின்ற அந்தணர் கூட்டத்தைப் பூரிப் பார்ப்பான்,என்ற நிந்தா வாசகம் வழங்குவது இந்த செட்டிநாட் டிலே சஹஜமாயிருக்கின்றது. ஸ்ரீ நீலகண்டதீக்ஷிதரவர்கள் தெரி வித்ததுபோல் இதரவ்ருத்திகளில் சிறிதும் புத்திசெல்லாத ஒரு பகுதியார் आबालवृद्धम् இந்த கோஷ்டியில் விளங்குவதைக்கா ணும் பொழுது உண்மையான ப்ராஹ்மணதர்மத்தில் ச்ரத்தை கொண்ட எவர்க்கும் மநோவேதனை உண்டாவது இயற்கை. இ வர்களின் பொழுது அஹோராத்ரம் யாத்திரையிலோ, தனர்ஜ னத்திலோ, நித்ரையிலோ, சூது சொக்கட்டான் முதலிய நிந்திய விளையாட்டிலோ, மற்றும் ப்ராயச்சித்தார்ஹமானகார்யங்களிலோ விநியோகமாகின்றது. தமிழ் நாட்டின் பிரதிகிராமந்தோறும் ஒரு வர்ணாச்ரமஸபை ஸ்தாபித்து அவரவர்களின் கடமையை ஒழுங் காக நிறைவேற்றும் வண்ணம் உதவிபுரியத் தக்க ஏற்பாடு செய் யவேண்டும்.

தாசில் உத்யோகம், நியாயாதிகஸ்தானம், ஜில்லாநிர்வாஹம் முதலிய வேலைகளைச் செய்து உபகாரச் சம்பளமும்பெற்று ஓய்வு நேரம் அமைந்துள்ள பிராஹ்மண ஸ்ரீமான்கள் லோகோபகார மான இந்தக் கைங்கர்யங்களைச் செய்யமுன் வந்தால் அவர்களின் வித்யாதனசக்தி எவ்வளவு ச்ரேயஸ்ஸைக் கொடுக்கும்? பகவான் கருணையோடு கொடுத்த ஸமயத்தை அவருக்குத் திருப்திகாமான கார்யத்தில் விநியோகிப்பதைப் பார்க்கினும் த்ருப்திகாமான கார்

न मे पार्थास्ति कर्तव्यं त्रिषु लोकेषु किंचन ।

யம் அவருக்கு என்ன இருக்கின்றது?

ब्राह्मणी मामकी तनुः ॥

என்று பார்த்தனைப்பார்த்து வெளிவந்தபகவத்வசனம்

பிராஹ்மணன் என்னுடைய சரீரம் என்றும் ப்ரவர்த்தித்திருக்கும் விஷயத்தை சிந்தனுசக்தியோடு யோசித்தால் ப்ராஹ்மண ஸமூஹக்ஷேமத்தை வ்ருத்தி செய்வதே பகவதுபாஸனை என்று தீர்மான மாகவில்லையா? தவமும் தவமுடையார்க்கே என்றபடி மஹாத்மாக்களின் சித்தவ்ருத்தி இங்கு ச்ரத்தையோடு திரும்பி, செட்டி நாட்டிலும் இதர இடங்களிலும் காணப்படுகின்ற பிராஹ்மணர்களின் குறையை நிவர்த்தி செய்ய வேண்டுகிறேன்.

ஸ்ரீ ராமபத்ர சர்மா.

ஆசாரம்.

यत्कृपालवमात्रेण वाग्विभूतिर्विजृंभते ।
शङ्करं सद्गुरुं वन्दे तं महान्तं जगद्गुरुम् ॥

ஆரியர்களே.

உலகில் தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷமென்று புருஷார்த்தங்கள் நான்கு வகைப்படும். அவற்றுள். அர்த்தம் காமம். இவைகளை லௌகிக புருஷார்த்தங்களென்றும். தர்மம் மோக்ஷம். இவைகளை வைதிக புருஷார்த்தங்களென்றும், இருவகையாகப் பிரிக்கலாம். இவற்றுள் வைதிக புருஷார்த்தங்கள் லௌகிக புருஷார்த்தங்களைக் காட்டிலும் மேலானவையென்பதை யாவருமறிந்த விஷயமே. இவற்றுள் பரம புருஷார்த்தமென்று சாதுக்களால் அபேக்ஷிக்கப்பட்டது மோக்ஷமே. அம்மோக்ஷத்திற்குச் சாதனம் தர்மமே,

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।

என்றதால் தர்மங்களுக்கு எப்பொழுது மாலின்யம் ஏற்படுகிறதோ அப்பொழுது தான் அவதரித்து அதர்மத்திற்கு அழிவையுண்டுபண்ணி தர்ம்மத்தை நிலைநிறுத்துவதாக. கீதையில் கூறியுள்ளார். ஆகையால். தர்மம் மோட்சசாதனம் என்று தெறிகிறபடியால் அதைச் செய்வது அவச்யமாகும். தர்மசாதனமாக ஸத்ஸங்கம். சீலம். ஆசாரம் முதலியவைகளில் பயிற்சிவேண்டும்.

(தொடரும்) A. சிவராம சாஸ்திரியள்

மீமாம்ஸாசிரோமணி, ஸம்ஸ்கிருத காலேஜ், திருவாதி.